

அமரர் திருமதி செல்லம்மா கணிதசிங்கம்

அவர்களின்

# நினைவு மலர்

24.01.2010




# விநாயகர் காப்பு

ஐந்துகரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலுமெயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

# சமர்ப்பணம்.

தாயிற் சிறந்த கோயிலுமில்லை
தருமத்திலே அவளை விடத் தத்துவங்களில்லை
தூங்காது விழித்திருந்து
துயரங்களை ஜெயித்து நின்று
ஆராத இன்பமாய்
அருள் பொழியும் சொரூபமாய்
தீராத நோய் தீர்க்கும் திவ்விய அமுதமாய்
வேராகி விருதெறியும் விருட்சமாய் நிமிர்ந்து
விளையும் பயிர்களிலே தன்னுயிர் சேர்த்து
முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாட்சுமந்து
தொந்தி சரிய சுமந்து பெற்றெடுத்து
கைப்புறத்திலேந்தி கனகமுலை தந்த
எங்கள் தாயின் பாதக்கமலங்களுக்கு
இந்த நினைவு மலர் சமர்ப்பணமாகிறது



# நெஞ்சு நீங்காத நினைவு மலர்

## திருமதி செல்லம்மா கணிதசிங்கம் அவர்கள்



மண்ணகம்
18.07.1930

விண்ணகம்
25.12.2009



## விநாயகர் வணக்கம்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக்கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## தேவாரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

மந்திர வாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வல முறை இறையே

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தா உனக்காளா இனி அல்லேல் எனலாமே

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட
பாற் கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.



## திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை இரும் பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன்அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச்சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

# அமரர் செல்லம்மா கணிதசிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

செந்தமிழும் சைவமும் சேர்ந்து மணம்பரப்பும் சிவபூமியாம் எம்தமிழ் ஈழதேசத்திலே கலைவளமும் கல்விப்பெருக்கும் பொங்கிப் பெருகும் யாழ்ப்பாணநகரத்தின் வடக்கே வந்தாரை வரவேற்று வாய் ருசிக்க விருந்தளித்து செந்தாரை போல் சிவந்தமண்ணாய் இயற்கை அழகும் எழில் கொஞ்சும் வயல்வனப்பும் நிறைந்து கயற்கண்ணியம்பாள் மகா காளிதேவி இருந்து அரசாட்சி செய்யும் தாய்நிலம் குப்பிளான் ஆகும்.வேறு எந்த மதமும் இல்லாத புமி இந்தப்பூமியாகும். சைவத்தையே உயிராகவும் தமிழை உடலாகவும் தன்னையே அர்ப்பணித்து நின்ற ஆறுமுக நாவலரின் வழித்தோன்றலாய் தன்னிகரற்ற தனிப்பெரும் மாணாக்கனாய் விளங்கிய காசிவாசி செந்திநாதையர் அவர்கள் வாழ்ந்த பெருமைக்குரிய எம் மண் எங்கள் மண்ணாகும். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் குப்பிளாய் செடிகளால் நிறைந்து விளங்குவதால் இப்பூமி குப்பிளான் என்று சிறப்புப்பெயர் கொண்டு அழைக்கப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

பன்னெடும்காலமாக எல்லாம்வல்ல எம்பெருமாட்டி மகா காளிதேவியாக எழுந்தருளி அரசாட்சிசெய்யும் இக்கிராமம் எங்கும் பச்சைப்பசேல் என்று காட்சியளித்து எங்கும் தாய்மையுணர்வைப் பிரதி-பலித்துக்காட்டும் தண்மையுடையதாக விளங்கும் இம்மணிணிலே தான் எச்சமயம் ஆனாலும் மெய்ச்சமயமாய் விளங்கும் சைவசமயத்தை தம் சமயமாகக்கொண்டுவாழும் தமிழ்மக்கள் மிகவும் ஒன்றுபட்டுழைப்பதிலும் ஒற்றுமையோடு வாழ்வதிலும் சிறந்து விளங்குகின்றார்கள் என்பதில் எந்தவித ஐயப்பாடுகளும் இருக்கமுடியாது. இல்லாத என்னும் கிராமத்திலே சீரும்சிறப்போடு வாழ்ந்துவந்தவர்கள் தான் முத்தையா தம்பதிகள். கார்காத்து ஊர்காத்து களனியுடன் வயல்காத்த வேளாளநற்குடியாய் விளங்கிய நற்குலமாம் திருவாளர் அமரர் முத்தையா தங்கம்மாவின் அருந்தவப்பயனால் செல்வச் செழிப்போடு சிரித்தமுகமும் சீரிலங்கு வதனமும் பெற்றோரை உரித்து வைத்தாற்போல் உடலழகும் கொண்டு இரண்டு பெண்குழந்தைகளை ஈன்றெடுத்தனர். மூத்தபெண் பர்வதம். இரண்டாவது பெண் செல்லம்மா எனப்பெயர் சூட்டி வளர்த்துவந்தனர். அன்பும் அடக்கமும் பணிவும் பண்பாடுமாய் செல்வக் குழந்தையாய் செல்லம்மா நடைபயின்று

தெள்ளுதமிழ்பேசும் பள்ளிப்பருவத்திலே விக்னேஸ்வரா வித்தியா சாலையிலே தன்னுடைய ஆரம்பக்கல்வியை கற்று வளர்ந்தார்.

சைவநற்குணமும் சாந்தமிகு வதனமும் மெய்நிறையத் திருநீற்றின் ஒளிவிளங்கும் கோலத்துடன் எட்டுத்திசையும் கொட்டி முரசொலிக்கும் காளியம்பாள் அருள்வதனம் கனகமணிவளம் பொழிய தேவார பராயணங்களைத் தித்திக்க ஓதுகின்ற மாணவியாய் வளர்ந்த மங்கையாம் செல்லம்மாவின் மகத்துவங்கள் பெருமையினை எழுத்தில் வடித்திட இயலாத காரியமாகும்.

குலமானம் நிறைந்த அழகான பருவத்திலே கல்வியுடன் நிறைவோடு கல்விகற்று நித்திலமாய் ஒளிவீசும் பருவத்திலே எம் தமிழ் மக்களுடைய கலாச்சாரப்படி பெரியோர்கள் நிச்சயத்தின்படி அவ்வூரில் வாழ்ந்த இருமரபுந்தூய வழித்தோன்றலான அமரர்கள் திருதிருமதி வீரவாகு குட்டிப்பிள்ளை தம்பதிகளின் அருந்தவப்புதல்வன் கணித சிங்கம் அவர்களுக்கும் திருநிறைச்செல்வி செல்லம்மா அவர்களுக்கும் உற்றார் உறவோடு ஊர்மக்கள் வாழ்த்துரைக்க எல்லாம் வல்ல அன்னையின் அருளோடு 11.07.1949ல் திருமணம் இனிதே நடந்தேறியது.

ஆதிபராசக்தியாய் அருள்சுரந்த அன்னைமாகாளிதேவியின் திருவருளோடு இருமனம் கொண்ட திருமணவாழ்வில் இனிதுற வாழ்ந்து வந்த இவர்களுடைய குடும்பத்திலே நல்லறம் என்னும் இல்லறம் சிறக்க இயற்றிய அருந்தவத்தின் பயனாக "ஏவா மக்கள் மூவா மருந்து" என்னும் தத்துத்திற்கேற்ப கள்ளம் கபடமில்லா கனிவுடைய மழலைக-ளாய் புவனேந்திரன் ஜெயபாலன் சிவதேவன் என்னும் புத்திரர்களை பெற்றெடுத்து பெயர்சூட்டி அற்புதமாய் வளர்த்தெடுத்தனர்.

காலம் அறிந்து கல்வியுடன் நல்லறிவும் ஞாலமிகுவாழ்வில் நல்லோராய் வளர்த்தெடுத்து அன்போடு பண்பாய் அனைத்தும் நிறைவாக வரமளித்த வாழ்வு தந்த எங்கள் கண்கண்ட தெய்வங்களின் கருணையை நாம் எழுத்தில் வடித்துவிட முடியாது. அறம் செய்ய விரும்பு ஆறுவது சினம் என்றும் அன்பே சிவம் என்ற அரும் பெரும் தத்துவத்தையும் பண்பாக ஊட்டி எமைப் பாசத்தோடு வளர்த்தெடுத்த உங்களைப்போல் தெய்வங்களை நாங்கள் உலகத்திலே கண்டதே இல்லை. பசித்திருந்து விழித்திருந்து பாதுகாத்து தாங்கள் பட்டினியாய்க் கிடந்தாலும் எங்களை பசியின்றி வாழ வைத்தவர்கள்.

அன்பு கருணை மனிதநேயம் தமிழ்ப்பண்பாடு காட்டி கலாச்சாரப் பழக்கவழகக்கத்துடன் அன்பாய் வளர்த்தெடுத்த அந்தங்கணங்களை மனம் இருத்திப்பார்க்கையிலே நெஞ்சு பொருமி நினைவோடு கண்ணீர் வடிகிறது.

மாதா பிதா குருதெய்வம் அவர் மலரடி தினம்தினம் வணங்குதல் செய்வோம் என்ற மகத்தான உண்மையை எமக்குப் போதித்தவர்கள். வாழும் வழிகாட்டி வளமோடு ஒற்றுமையாய் வாழப்பழக்கிய வழிகளை நாமும் பின்பற்றி வாழத்தலைப்பட்டதனால் உலகத்திலே நாங்களும் மனிதர்களாய் வாழ்கின்றோம் என்று நினைத்துப்பார்க்கையிலே சந்தோஷமாக இருக்கின்றது. இத்தகைய வாழ்வுதந்த இதயதெய்வங்களை நாம் அன்போடு இன்னமும் வணங்கித்துதிக்கின்றோம்.

ஊரோடு ஒன்றாகி உறவுகளோடு பலமாகி வாழ்வோடும் வளமோடும் மகிழ்வோடும் வாழ்ந்து ஆலயத்திருப்பணியும் அறங்காக்கும் பெரும்பணியும் உற்றார் உறவுகட்கும் உற்றதுணையாய் இருந்து எவ்வாறு வாழவேண்டும் என்ற வாழ்வியலைக்கற்றுத்தந்து வெளிநாடுகளில் வாழும் சிறப்பையும் ஏற்படுத்தித்தந்த எமது பெற்றவரை போற்றி வணங்குகின்றோம்.

காலங்கள் உருண்டோட நாட்டின் அமைதியற்ற சூழலால் இடம்பெயர்ந்து வாழ்ந்தாலும் சொந்தமண்ணை பிரிந்துவாழ விருப்பமற்றவர்களாய் வாழ்ந்து வந்தனர்.

தாய்மண்ணையும் தமிழ்உறவுகளையும் எல்லாம்வல்ல எம்பெருமாட்டியாம் காளியம்பாளையும் விட்டுப்பிரிய மனமின்றி வாழும்காலத்திலே புலம்பெயர்ந்து வாழும் பிள்ளைகளின் பலகால வற்புறுத்தலாலும் வேறுவழியில்லாமலும் கண்ணீர் பெருக்கெடுத்து கங்கையாய் ஓட பிறந்த மண்ணைவிட்டுப்பிரிந்து புகுந்தமண்ணாம் பிரான்ஸ் நகரத்திற்கு 1991ல் இருவரும் வந்து சேர்ந்தனர்.

பெற்றாரைக்கண்ட பிள்ளைகளும் மகிழ்ச்சியிலும் சந்தோஷத்தாலும் பாசத்தோடு உபசரித்து வரவேற்றனர். காலம் அறிந்து கனிவோடு அரவணைத்து அன்பாய் பண்பாய் அன்னையையும் தந்தையையும் அகமகிழ்ந்து உபசரித்தனர்.

தாய்மண்ணின் சூழலால் எத்தனையோ பெற்றோர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்துவருவதைக் கண்ட இவர்கள் படிப்படியாக

தங்களையும் பழக்கப் படுத்திகொண்டு வாழ்ந்தார். 1991ல் இருந்து பிள்ளைகளோடும் பேரப்பிள்ளைகளோடும் அன்பாகவும் பண்பாகவும் பாசமாகவும் வாழ்ந்த இவர்களை எல்லோருக்கும் நன்றாகப் பிடித்திருந்தது.

பெற்றவர்களின் தியாகங்களை நாம் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் செய்து விடமுடியாத அந்த தெய்வங்களை அகமகிழ்ந்து அழகுபடுத்தி பார்க்க விரும்பிய மக்கள் மருமக்கள் சகோதரி பேரப்பிள்ளைகள் யாவரும் தங்கள் அன்னை தந்தைக்கு அறுபதாம் கலியாணத்தினை 11.07.2009லே வெகு கோலாகலமாக பிரான்ஸ்லே கொண்டாடி மகிழ்ந்தனர்.

கலாச்சாரம் மாறாத பண்போடு மக்கள் மருமக்கள் பேரக்குழந்தைகளும் உற்றார் உறவுகளும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துரைக்க அன்னையும் தந்தையும் ஆதிசிவனும் பார்பதியும் போல் மகாவி'ணுவும் இலக்'மியும் போல இருந்தகாட்சி எம் வாழ்க்கையிலே கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

பேரப்பிள்ளைகளுக்கு ஏற்ற நல்ல நல்ல கதைகள் சொல்வதும் தாய்மொழியைப் படிக்கவும் பேசவும் பழக்கிக்கொடுப்பதும் நல்லபழக்கவழக்கங்களை உணர்த்தி அன்போடு அவர்களைத் தமிழ் பேசவைப்பதும் இவர்களுடைய நாளாந்த வேலையாக மாறிவிட்டது. பிள்ளைகளுக்காக தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த இவர்கள் தற்போது பேரப்பிள்ளைகளுக்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

மூத்த மகன் புவனேந்திரன் கனடாவிலும் இளையமகன் ஜெயபாலன் இலண்டனிலும் மூன்றாவது மகன் பிரான்ஸ்சிலும் இருப்பதால் இவர்களுடைய விருப்பத்திற்கேற்ப பெற்றோர்களும் சென்று பேரக்குழந்தைகளோடும் உற்றார் உறவுகளோடும் தமது அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொண்டு வாழும் காலத்திலே நன்றாகவும் திடகாத்திரமாகவும் இருந்துகொண்டு பிள்ளைகளுக்கு ஒற்றுமை மாறாது வாழும் நல்வழிகளைக் காட்டி வாழந்தனர்.

நோயென்றும் நொடியென்றும் வாடிக்கிடக்காமல் வாழ்ந்திருந்த எம் அன்னைக்கு எதிர்பாராமல் ஏற்பட்ட சிறுநீரகவியாதியினால் சற்றுத் துன்பப்பட்டுப்போனார்கள். இது இவர்களது குடும்பத்திலுள்ள எல்லோர் மனதையும் பாதித்துவிட்டது.

கடைசி மகனான திருதிருமதி சிவதேவன் நந்தினி அவர்களோடு தங்கியிருந்த தாயாரின் உடல் நிலை பாதிப்படையவே தன் உயிரைக் கொடுத்தாவது தாயாரைக் காற்றிவிடவேண்டும் என்று இருவரும் துடியாய்த் துடித்தனர். இராப்பகல் பாராது வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்வதும் வீட்டுக்கு அழைத்து வருவதுமாக இடைவிடாது தனது பணியைச் செய்து வந்தார்கள். அன்போடு அருகிருந்து அன்னைக்கு உதவிசெய்யும் பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டவனாய் அயராது பாடுகள் பட்டிருந்த இவர்களுடைய ஆதரவால்தான் அம்மா அதிக காலம் வாழ்ந்தார்கள்.

இருந்த போதும் காலமும் நேரமும் விதியாகிவந்து எங்கள் அன்னையைக் காவுகொண்டு போனதும் எங்களுக்கெல்லாம் ஆற்றெணாத் துயரைத்தைத் தந்துவிட்டது அப்பாவையும் அம்மாவையும் இறுதிவரை வைத்து பார்க்கவேண்டும் என்ற எண்ணத்திற்கு இறைவன் முற்றுப்புள்ளிவைத்துவிட்டான் என்றே எண்ணத்தோன்றுகின்றது.பிரான்ஸ் நகரிலே வாழும் காலத்தில் அம்மாவுக்கு அதிக உதவிகள் தேவைப்பட்டிருந்தது.அம்மாவின் உடல் நிலையை அறிந்து தன்னைப்பெற்ற அன்னைக்காக கடைசிவரையும் உழைத்த கடைசிமகன் சிவதேவனதும் மனைவியினதும் உதவிகளை நாம் மறக்கவே முடியாது. இரவுபகல் ஓயாது கண்ணுறங்காது தனதுவேலையைக்கூடப் பொருட்படுத்தாது தாயாரின் பக்கத்திலே இருந்து பணிவிடைசெய்ததும் தாயை எப்படியும் காப்பாற்றிவிடவேண்டும் என்ற நோக்கத்தோடு பட்டதுன்பங்களை எழுத்தில் வடிக்கமுடியாது.இவ்வாறே எல்லோரும் இறுதிவரையும் அம்மாவினுடைய நலனுக்காக பலவழிகளில் பல முயற்சிகள் செய்தனர். இருந்தாலும் கடைசிநேரத்தில் தன்னுடைய பிள்ளைகளுடைய உதவியோடு மக்களைப்பெற்ற மகராசியாக எங்களுடைய அம்மா இறைவனுடைய திருவடியை சேர்ந்துவிட்டார் என்ற நிலையிலே யாம் எல்லோரும் அன்னையின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போமாக!

## கணவன் புலம்பல்

சீரிழங்கு பலவளங்கள் சிறப்பொழுகும் குப்பிள
பேரிலங்கப் பலகாலம் வாழ்ந்திருந்தோம் பெண்மயிலே!
யாரோடு யான் நோவேன் யாரிடத்தில் போயுரைப்பேன்
தீராத துன்பமிதை தீர்க்க வழியறியேனே
நெஞ்சமெலாம் பதறுதம்மா நினைவில் முகம் தெரியுதம்மா!
அஞ்சுகமே என்னுயிரே கருணைமுகம் காட்டாயோ!
மக்களுடன் மருமக்கள் மனம் கலங்கி துடிப்பதைப பார்
பேரரெல்லாம் மம்மியென்று புலம்புவதும் கேட்கலையோ!
ஊர்ச்சனங்கள் உறவு எல்லாம் ஓடிவந்து தேடுகின்றார்
வார்த்தையேதும் பேசாமல் வாய்மூடிக்கிடந்ததேனோ
ஒன்றுபட்டு வாழ்ந்திருந்தோம் உறவுகளை வளர்த்திருந்தோம்
தூரதேசம் சென்றனையோ சொந்தமெலாம் மறந்தனையோ
கைப்பிடித்த நாள் முதலாய் காணமல் இருந்ததில்லை
எப்படி நான் உனைப்பிரிந்து இங்கிருப்பேன் என்னுயிரே
என்னுயிரே இணைபிரியா உன்னுறவை நான் மறவேன்
அன்னைமகா சக்தியவள் அரும்பணிக்காய் சென்றனையோ
பொன்பல வாணனவன் பொன்னடிக்குள் நின்றனையோ
திருமுகத்தைக் காணமல் தேம்பி யழுகிறோமே
ஈசன் திருவடியில் என்றென்றும் வாழ்திடுவா்

## அக்கா புலம்பல்

என்னருமைத் தங்கையரே செல்லம்மா
எந்தன் உயிர் உடன் பிறப்பே செல்லம்மா
ஓர்மடியில் கண்ணயர்ந்து ஓடிவிளையாடி நின்று
பாடித் திரிந்தோமே செல்லமா நீ
பாதியிலே சென்றதெங்கே சொல்லம்மா!

பிள்ளைகள் படுந்துயரம் சொல்லி முடியாது
பேரரர்கள் துடிப்பதையோ பார்க்க முடியாது
ஏங்கித் துடிக்கின்றேன் என்பிறப்பே எங்குசென்றாய்
இறைவனின் திருவடியில் என்றும் நீ வாழ்வாய்
அன்னையவள் திருவடியில் அகலாத திருவிளக்காய்
என்றும் ஒளிபரப்பி எங்களையும் காத்திடம்மா

## பிள்ளைகள் புலம்பல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நோக
கையிலே தூக்கி கருணைமுத்தம் தந்தாயே!
மெய் வருத்தம் பாராமல் மேதினியில் எமைத்தாங்கி
வையகம் போற்ற வழிசமைத்த உத்தமியே
எம்மைப் பெற்ற தாயாரே எங்கே மறைந்தாயம்மா
உங்களைக் காணாமல் உறங்க முடியலையே
பட்டினியாய் நீ கிடந்து பாற்சோறு எமக்களிப்பாய்!
தொட்டிலிலே சீராட்டி தூங்கவைத்து ரசித்திடுவாய்
தெய்வமாய் நீயிருந்து திக்குத்திசை காட்டிவிட்டு
தெய்வமாகிச் சென்றாயோ தேற வழி தெரியவில்லை

மாமி எங்கே! என்றிங்கு மருக்கள் தான் துடிக்க
பேரக் குழந்தையெல்லாம் பிரமித்துப் போயிருக்க!
எங்களைவிட்டு விட்டு எங்கே நீ போனாயம்மா!
இறைவன் திருவடிக்கு சேவை செய்யப் போனீரோ!
அப்பா தனிமரமாய் ஆனதென்ன கோலமம்மா
இப்போது நாங்களெல்லாம் எப்படி ஆறுவது
மனைவி மக்கள் படுந்துயரம் மாற்றவழி தெரியது
எப்போதும் நீயிருந்தால் எங்களுக்கு குறைவேது
இறைவன் திருவடியில் என்றென்றும் நீ வாழ
போற்றுகின்றோம் தாயாரே பொன்னடிகள் வாழ்கவென்று

## மருமக்கள் புலம்பல்

தாயாகி இருந்து எமக்குதவி நல்ல
தத்துவம் சொல்லி வழிகாட்டி
ஓயாது எங்களைக் காத்திருந்த
அம்மா நீங்கள் எங்கு சென்றீர்
கொடுத்து வைத்தோம் வாழ்க்கையிலே நல்ல
குணத்தில் மிகுந்த மக்களினால்
எடுத்த கருமம் எல்லாமே
இனிதாய் நடத்தி தந்திடுவீர்
படுத்த படுக்கை ஆனபோதும் உங்கள்
பாசம் குறைய வில்லையம்மா
இரக்கமில்லா காலனவன்
ஏன் எம்மைப் பிரித்தானோ?

கண்ணே மணியே என்று சொல்லி - எங்கள்
கண்மணிகளோடு விளையாடி
மண்ணின் பெருமை தனையூட்டி
மடியில் இருத்திக் கதைகள் சொல்வீர்
அன்னை மடியே எம் தாயே
உம்மை எப்போது இனிக் காண்போம்!

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

சின்னச் சின்ன கதைகள் சொல்லி
சிரிக்க வைத்த மம்மி எங்கே!
அன்னம் ஊட்டி அரவணைக்கும்
எங்கள் அன்பான மம்மி எங்கே
மம்மி எங்க போனாரம்மா
எங்கேயும் காணவில்லை
மம்மி எங்க போனாரப்பா
மாடியிலும் காணவில்லை!

மம்மி வருவாவோ - எமை
மகிழ்ந்து மடியில் வைக்க
நெஞ்சு துடிக்குதம்மா
நெடுநாளாய் போனதம்மா
பப்பி! மம்மி எங்க போச்சு
பார்க்க முடியவில்ல
சொர்க்கத்துக்குப் போயிருந்தால்
சுகமாக வாழட்டும்

## ஊரார் புலம்பல்

ஓர்மண்ணில் உறவாகி வாழ்தோமே செல்லம்மா
ஓர்நொடியில் ஊரைவிட்டு எங்குசென்றாய் சொல்லம்மா
கார்மேகம் மழைபொழிய ஊர்விளைந்து வயல் பெருக
ஊர்கூடும் போதினிலே உன்னையிங்கு காணவில்லை
தீராக் கவலையினால் தேடி நின்றோம் உன் வரவை
சீராளன் திருவடிக்கு தோத்திரங்கள் நாமிசைத்தோம்
ஐயா பரம் பொருளே ஆண்டருள்வர் நின்னடியில்!
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்!!1
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

# அன்னையாருக்கு இறுதிக்கடன் இயற்றும்பொழுது பாடியவை

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையல்என்ற போதே பரிந்து எடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்துஎன்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்துஎடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டு என்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்

அரிசியோ நான்இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் - உருசிஉள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு

## விருத்தம்

முன்னை இட்டதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென்இ லங்கையில்
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே

## வெண்பா

வேகுதே தீஅதனில் வெந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருகு பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்துஎடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம்கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய்.

## திரு ஏகம்பம்

எத்தனைஊர் எத்தனைவீடு எத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபேர் இட்டுஅழைக்க ஏன்என்றேன் - நித்தம்
எனக்குக் களை ஆற்றாய் ஏகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட்டோ

## திருக்குற்றாலம்

காலன் வருமுன்னே கண்பஞ்சடையாமுன்னே
பாலுண் கடைவாய் படும்முன்னே - மேல்விழுந்தே
உற்றார் அழும்முன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு

## பொது


விட்டுவிடப் போகுது உயிர் விட்டஉட னேஉடலைச்
சுட்டுவிடப்போகின்றார் சுற்றத்தார் - பட்டதுபட்டு
எந்நேர மும்சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்

ஆவியோடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவிஎன்று நாமம் படையாதே - மேவியசீர்
வித்தார மும்கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி

ஒன்பதுவாய்த் தோல்பைக்கு ஒருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே அலைந்தாயே - வன்கழுக்கள்
தத்தித்தக் திச்செட்டை தட்டிக்கட் டிப்பிட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு.

எத்தனைநாள் கூடி எடுத்த சரீரம்இவை
அத்தனையும் மண்தின்பது அல்லவோ - வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பகல் அற்றஇடம்
மேலைக் குடிஇருப்போ மே.

இருப்பதுபொய் போவதுமெய் என்று எண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினைஉ ன் னாதே - பருத்ததொந்தி
நம்மதுஎன்று நாம்இருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மது என்று தாம்இருக்கும் தான்.



# நன்றி நவிலல்


மனுட வாழ்விலே வாழ்வுக்கு வரலாறாகி நிற்பவள் தாய். அந்தத்தாயின் திருவயிற்றிலிருந்து தான் உலகத்திலுள்ள ஜீவராசிகளெல்லாம் பிறப்பெடுக்கின்றன. அத்தகைய மாண்புமிக்க தாயின் பெருமைகளை எழுத்தில் வடித்துவிட முடியாது. இவ்வாறே எங்களுடைய வரவின் ஆதாரசக்தி யின் அடித்தளமாய் எமது குடும்பத்தின் முதுகெலும்பாய் நின்று துன்பங்களையும் துயரங்களையும் இன்பமயமாக்கி எங்களுடைய வாழ்வுக்கும் தாயாகி நின்று எங்களை இயக்கிவைத்த அந்த இயக்கசக்தி தற்போது இளைப்பாறிக் கொண்டுள்ளது. அந்த மகாசக்தியான எங்களுடைய தாயார் நாட்டின் சூழல்காரணமாக 1991ஆண்டிலிருந்து எங்களோடு பிரான்ஸ் நகரத்திலே வாழ்ந்து வந்தார்கள். கடந்த மார்கழி மாதம் 25ம்நாள் எங்களையெல்லாம் ஆறாத்துயரிலாழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டு இறைபதம் அடைந்த எங்களுடைய தாயாரின் பிரிவுத்துயரத்தில் கலந்துகொண்டு எங்களுக்கு ஆதரவு தந்துதவி நின்ற எமது மதிப்புக்குரிய எங்கள் தேசத்தின் உறவுகளுக்கும் கிரியை நிகழ்வுகளில் முன்னின்று எமக்கு சகல உதவிகளையும் செய்து நின்ற பெருமக்களுக்கும் அவ்வப்போது எமக்கு ஆறுதல்கூறி எமது வேதனைகளையும் சோதனைகளையும் தாங்கி தோளோடு தோழ்நின்றுதவிய தோழமையுள்ளங்களுக்கும் உற்றார் உறவினர்கள்,நண்பர்களுக்கும் அனுதாபங்களையும் ஆதரவுகளையும் வழங்கியவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதில் பெரும் ஆறுதல் அடைகின்றோம். சிவபதம் எய்திய எங்கள் தெய்வத்தாயார் அமரார் செல்லம்மா கணிதசிங்கம் அவர்களுடைய ஆத்மா வீடுபேறடைய எல்லாம் வல்ல பொன்னம்பலவாணனைப் பிரார்த்தித்து அவர் திருப்பாதக்கமலங்களை துதித்து அனைவரும் நல்லருள் பெறுவோமாக

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்

## திருமதி செல்லம்மா கணிதசிங்கம் அவர்களின்

# வம்சாவழி




கீதாசாரம்
எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.
"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்